பாலிந்தநுவர பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாலிந்தநுவர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாலிந்தநுவர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 3.28 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் சரியாக காண்பிக்கப் படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| | • ஆண்டின் போது கிடைக்க வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 12,077,626 ஆக இருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் அது ரூபா 9,965,345 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| | • ஆண்டின் போது செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 9,431,364 ஆக இருந்த போதும், செயற்பாட்டு நடவடிக்கைகளில் அது ரூபா 9,424,481 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| | • ஆண்டின் போது முற்பண பெறுவனவுகளில் குறைவு 1,027 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2020 இன் இறுதிக் கணக்குகளில் சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 3.9 இன் பிரகாரம் நிறுவனத்தால் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் உள்ளபடியான தகவல்களை ஒப்பீட்டு ரீதியில் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக அவ்வாறான ஒப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டுகளில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 6.3 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் குருந்துகஸ்மானான மற்றும் மானானகொடல்ல காணி மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக மண்டபம் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் அதன் மொத்த மதிப்பீட்டுப் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான ரூபா 2,530,000 கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 6.4 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்கள் அதன் அடிப்படையை இனங்காணும் போது நிறுவனமொன்று அதன் கிரயத்தை இனங்காண வேண்டியிருந்த போதிலும் ரூபா 19,541,000 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கமும் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் மூலம் பதிவழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த வாடகை ரூபா 1,442,239 இனை பதிவழிப்பதற்கான அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன் அப்பெறுமதி நிலுவையாகவிருந்த வாடகைக் கணக்கில் அகற்றப்பட்டு ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | உரிய அங்கீகாரத்தைப் பெற்று வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 07 காணிகள் மற்றும் 02 கட்டிடங்களின் பெறுமதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இனங்காணப்படாதிருந்த ரூபா 5,900,000 கிரயமான 04 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு கணக்கு விடயத்துக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 89,538,252 ஆகவும் பட்டோலைகளின் பிரகாரமான பெறுமதி ரூபா 89,827,011 ஆகவும் இருந்தமையால் ரூபா 288,759 வேறுபாடு காணப்பட்டது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,572,270 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,126,700 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 276,414 ஆகும். | கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் வருமானத்தை சேகரிப்பதற்கு வசதியீனமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஏக்கர் வரி நிலுவை ரூபா 58,240 ஆகும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வாடகை வருடாந்த சிட்டையிடல் ரூபா 4,677,182 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 1,470,780 அதாவது 31 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | சந்தை அனுமதிப்பத்திரக் கட்டண வருடாந்த சிட்டையில் ரூபா 523,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 171,000 அதாவது 33 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,592,529 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,460,695 ஆகும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் 2021 மார்ச் 30 ஆந் திகதி அதாவது ஒரு மாத தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்கு தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்கள் இல்லாமையால் தாமதம் ஏற்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சட்டத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |